**மாகாணக்கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்**
**கல்விப்பொதுத்தராதரப்பத்திர (உயர்தர) மாதிரிப் பரீட்சை - 2019**

| மனைப்பொருளியல் | 28 T I | இரண்டு மணித்தியாலயம் |
|---|---|---|

✳ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
✳ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

01. $C_X(H_2O)_y$ இச் சூத்திரத்தினால் காட்டத்தக்க சேதன சேர்வையானது எப்போசணைக்குரியதாகும்.
1. குளுக்கோசு 2. காபோகைதரேற் 3. கலற்றோசு
4. பொலிசக்கரைட் 5. புரற்றோசு

02. அங்கிகளின் உடலில் இயற்கையாகக் காணப்படும் அமினோ அமிலத்தில் மிக எளிமையான அமினோ அமிலமாகக் காணப்படுவது எது?
1. கிளைசின் 2. லியூசின் 3. இலைசின்
4. குளூற்றமின் 5. சிற்ரீன்

03. ஐதரோக்காபன் சங்கிலியில் இரட்டைப்பிணைப்பு ஒன்று காணப்படுகின்றது. இச்சேர்வை எவ்வாறு அழைக்கப்படும்?
1. பல் நிரம்பாக் கொழுப்பமிலம் 2. நிரம்பாக் கொழுப்பமிலம்
3. தனிநிரம்பாக் கொழுப்பமிலம் 4. நிரம்பிய கொழுப்பமிலம்
5. அத்தியாவசியக் கொழுப்பமிலம்

04. A - தாவரங்களிலிருந்து பெற்றுக்கொள்பவை
B - உடலில் முற்றுமுழுதாக சமிபாடடைவதில்லை
C - பற்றீரியா காரணமாக சொற்ப அளவில் சமிபாடடையும்.

மேற்குறித்த இயல்புகள் உடனான போசணையாகக் கருதக்கூடியது
1. பெக்டின் 2. மோல்றோசு 3. இலற்றோசு
4. குளுக்கோசு 5. கலற்றோசு

05. பால்சார்ந்த உற்பத்திகளை உள்ளெடுப்பதன் முக்கியத்துவம் தொடர்பான கருத்துக்கள் சில மாணவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.
A - நரம்புத்தொகுதியின் தொழிற்பாட்டிற்கும் செங்குருதிக்கலங்களின் உற்பத்திக்கும் அவசியமானது.
B - குடலின் அசைவுகள் நன்கு நிகழும்.
C - கல்சியம், பொஸ்பரசு ஆகியன அடங்கியிருப்பதால் என்பு, பற்களின் வளர்ச்சிக்கு அவசியமானது.
D - உடல் கொழுத்தல், நீரிழிவு நோய்கள், மலச்சிக்கல் போன்றவை ஏற்படும் ஆபத்து குறைவானது.
E - தயிர், யோக்கட் போன்ற நொதித்த உணவுகளில் விற்றமின் B அடங்கியிருக்கும்.

மேற்குறித்தவற்றில் பால்சார்ந்த உற்பத்திகள் குறித்த சரியான கூற்று

1. ABD　2. ACE　3. ABC
4. BDE　5. ADE

*06.* பொறிமுறை சமிபாடு ஆரம்பிப்பது சமிபாட்டுத் தொகுதியின் எப்பகுதியில் ஆகும்?

1. இரப்பையில்　2. பெருங்குடலில்　3. சிறுகுடலில்
4. முன்சிறுகுடலில்　5. வாய்க்குழியில்

*07.* தெற்காசிய நாடுகளில் காணப்படும் பொதுவான போசணைக் குறைபாடு.

1. மிகையூட்டம்　2. உயர்குருதி அமுக்கம்　3. நீரிழிவு
4. புரதசக்திக் குறைபாடு　5. அயடின் குறைபாடு

*08.* கீழே தரப்பட்டுள்ள உணவுகளில் ஈம் அல்லாத இரும்பு அடங்கியுள்ள உணவுக்கூட்டமானது

1. இறைச்சி, பசளி, அரிசி　2. மீன், நெத்தலி, வல்லாரை
3. கருவாடு, சோளம், குரக்கன்　4. கௌப்பி, மீன், பசளி
5. குரக்கன், பருப்பு, கீரை

09. BMI 30 இற்குமேல் என்பதனால் குறிப்பிடப்படுவது

1. உடலின் நிறையைக் குறைத்துக்கொள்ள வேண்டும்
2. உடலின் நிறையைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்
3. உடலின் நிறை போதுமானது
4. உயரத்திற்கமைய நிறை போதுமானது
5. உயரத்திற்கமைய நிறை போதுமானதன்று

*10.*
- ✸ உடலில் நீர்ப்பீடனம் குறைவடைதல்.
- ✸ உடலில் காயங்கள் ஆறுவது தாமதமாகும்.
- ✸ உடல் வளர்ச்சி சீராக நிகழாமை
- ✸ தலைமயிர் உதிர்தல்.


மேற்குறித்த அறிகுறிகள் எக்கனியுப்புக் குறைபாடாகும்?

1. கல்சியம்　2. சிங்கு (நாகம்)　3. இரும்பு
4. அயடின்　5. விற்றமின் A

*11.* போசணைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென செயற்படும் பொது அமைப்பு எது?

1. உணவுக்கட்டுப்பாட்டு நிருவாக அலகு　2. உணவு விவசாய தாபனம்
3. உலக சுகாதார அமைப்பு　4. போசணையியலாளர் சங்கம்
5. போசணையியல் தொடர்பான சர்வதேச அமைப்பு

*12.*



இங்கு காட்டப்பட்ட படமானது எவ்வடிவமைப்புக் கோட்பாட்டிற் கமைவானது.

1. சமநிலை　2. உறுத்தல்　3. விகிதசமம்
4. மீண்டுவரும் சந்தம்　5. மீள்வராசந்தம்

13. ‘சூழலின் இருப்புக்குப் பாதகமானவற்றை சூழலில் இழிவாக விடுவித்தல்’ இக்கருத்து இனங்காணப்படுவது.

1. நிலை பேறான தன்மை
2. காபன் பாதச் சுவடு
3. பசுமை எண்ணக்கரு
4. பாரம்பரியத்தன்மை
5. தொழிற்படுதன்மை

14. உணவு பரிமாறல் அளவைத் தீர்மானிக்கும் போது கவனத்திற் கொள்ளப்படும் பிரதானமான காரணியாகக் கருதப்படுவது:

1. உணவு வகைகளின் பண்பு
2. உணவில் அடங்கியுள்ள போசணை
3. உணவுப்பாகம்
4. உணவுத்தட்டு
5. உணவுக்கூட்டங்கள்

15. ‘அளவாக இருக்க அளந்து உண்க’ எனும் கருப்பொருளின் கீழ் முன்வைக்கப்பட்ட உணவுத்தட்டில் பாதி இருக்கவேண்டிய உணவுப்பொருட்கள்:

1. இறைச்சி, மீன், முட்டை
2. சோயா, அவரை, காளான்
3. சோறு, கிழங்கு, மரவள்ளி
4. கரட், கீரை, வெண்டிக்காய்
5. வாழைப்பழம், பப்பாசி, அரிசிமா

16. பாடசாலை மாணவர்களிடையே இரப்பை அழற்சி பரவலாகக் காணப்படுகின்றது. இதற்கான காரணமாகக் கருதக்கூடிய மிகச் சரியான கூற்று:

1. அதிக உறைப்புள்ள உணவுகளை உட்கொள்ளல்
2. அதிக புளிப்புள்ள உணவுகளை உட்கொள்ளல்
3. காலை உணவு உட்கொள்ளாமை
4. இரவு உணவு உட்கொள்ளாமை
5. உணவுக்கோலங்களை மாற்றுதல்

17. A - கோழி இறைச்சி, நண்டு, பால்
B - பொட்டாசிய அடக்கம் உயர்வான காய்கறிகள், பழவகை, கீரை வகை
C - தவிட்டரிசி, கோதுமைமா, கொழுப்பு நீக்கிய பால்
D - நார்ப்பொருள் உணவு, இறால், பழங்கள்
E - மீன், தோல்நீக்கிய கோழி இறைச்சி, பால்

மேற்குறித்த உணவுக்கூட்டத்தில் இதய நோயாளி ஒருவர் தவிர்க்க வேண்டிய உணவு வகையானது:

1. A
2. B
3. C
4. D
5. E


18. ✷ வாய் கோணியிருத்தல்
✷ திக்குதல்
✷ தலைச்சுற்று
✷ அதிக தலைவலி

மேற்குறித்த அறிகுறிகள் எந்நோய்க்குரியதாகும்.

1. உயர்குருதி அமுக்கம் 2. நீரிழிவு 3. இதயநோய்
4. கொழுத்த உடல் 5. சோர்வாதம்

19. தைத்த ஆடைக்கைத்தொழிலானது எத்தனையாம் ஆண்டு துரித வளர்ச்சி அடைந்தது?

1. 1897 2. 1977 3. 1898
4. 1979 5. 2007

20. 

இங்கு காட்டப்பட்டுள்ள தையலானது எத்தனையாம் தையல் வகையாகும்?

1. 100 2. 200
3. 300 4. 400
5. 500

21. கைத்துடைப்பம் எத்தனை cm அளவுடையதாக இருப்பது பொருத்தமுடையதாகும்

1. 38 cm 2. 36 cm 3. 28 cm
4. 30 cm 5. 35 cm


22.



மேற்குறிப்பிடப்பட்டுள்ள அலங்காரத் தையலானது

1. சற்றின் தையல் 2. நரம்புத்தையல் 3. பிரசீலியன் தையல்
4. சங்கிலித்தையல் 5. நிரப்புத்தையல்

23. கம்பளி நாரின் குறுக்குவெட்டுத் தோற்றத்தையும், நெடுக்குவெட்டுத் தோற்றத்தையும் காட்டும் படம் யாது?



1 2 3 4 5

24. பின்வருவனவற்றில் வெப்பமேற்றும் போது உருகித் திரவமாக மாறும் நார் எது?
1. லினன் 2. பருத்தி 3. கம்பளி
4. பொலியெசுத்தர் 5. கனியக்கன்னார்

25. A - முன்பக்க, பின்பக்க வேல்மடிப்பில் தைத்தல்
B - கொழுக்கியில் தைத்தல்
C - பக்கப்பொருத்தைத் தைத்தல்
D - இடைக்கு Facing வைத்து தைத்தல்
E - பின்பக்கத் திறப்பு வெட்டித் தைத்தல்
F - கீழ்விளிம்பைத் தைத்தல்

பாவாடை தைக்கும் ஒழுங்கு முறையின் சரியான படிமுறை:
1. ACDBEF 2. ADEBCF 3. AECDBF
4. ACDBEF 5. ADBECF

26. பத்திக் முறையில் சாயமூட்டுவதற்குச் சரியான துணியாகக் கருதப்படுவது:
1. பருத்தி, லினன் 2. பட்டு, நைலோன் 3. பொலியஸ்ரர், பருத்தி
4. லினன், கம்பளி 5. கம்பளி, பொலியெஸ்ரர்

27. பின்வரும் கூற்றுக்களுள் எழுத்து மூலமான தொடர்பாடலின் அனுகூலமாக அமைவது:
A - விரைவான தொடர்பாடலை மேற்கொள்ள முடியும்.
B - மீள்பாவனைக்கென கோவைப்படுத்த முடியும்.
C - தெளிவற்ற சந்தர்ப்பங்களில் வினவி தெளிவுபடுத்திக்கொள்ள முடிதல்
D - நிரூபிக்கக்கூடிய ஆற்றல் குறைவு
E - செய்தியைப் பெறுபவரின் கொண்ணிலை மற்றும் நடத்தைகளை அவதானிக்க முடிதல்.
1. A 2. B 3. C
4. D 5. E

28. 
- பிறப்புச் சான்றிதழ்
- ஆளடையாள அட்டை
- கல்வித்தகைமைச் சான்றிதழ்
- விளையாட்டு மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடு
- சுயவிபரப் பட்டியல்

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் கொண்டு செல்லப்படவேண்டிய பொருத்தமான இடமாகக் கருதப்படுவது.
1. விளையாடடுப் போட்டி ஒன்றில் பங்குபற்றும் போது
2. பாடசாலையில் சேரும் போது
3. நேர்முகப் பரீட்சைக்குச் செல்லும் போது
4. வேலையில் சேரும் போது
5. வெளிநாடு செல்லும் போது

29. நேர்முகப்பரீட்சையில் வினவப்படும் சில வினாக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

✷ நீங்கள் திருமணமானவரா?

✷ நீங்கள் வசிக்கும் இடம் எது?

✷ எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்கின்றீர்கள்?

மேற்கூறப்பட்ட வினாக்கள் எவ்வினா வகையினுள் அடங்குகின்றது?

1. திறந்தவகை வினாக்கள்
2. மூடிய வகை வினாக்கள்
3. தொழில் பற்றி அறிவதற்கான வினாக்கள்
4. பொதுவான வினாக்கள்
5. அவசியமான வினாக்கள்

30. உணவு பழுதடைதலில் நிகழும் உயிரிரசாயனச் செயற்பாடு பற்றிய சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது?

1. பூர்த்தியடையா உற்பத்திச் செயன்முறைகள் காரணமாக உணவு பழுதடைதல்
2. உணவினுள் ஒட்சிசனும், நுண்ணங்கிகளும் துரிதமாகப் புகுதல் காரணமாக உணவு பழுதடைதல்.
3. நீர்த்தாக்குதிறன் பெறுமானம் கூடிய உணவுகள் இலகுவில் பழுதடைதல்.
4. புறச்சூழலில் இருந்து உணவுக்கு ஒட்சிசன் பரவுதல் காரணமாக உணவு பழுதடைதல்.
5. வெவ்வேறு தாக்கம் காரணமாக எண்ணெய் மற்றும் கொழுப்பு அடங்கிய உணவுப் பொருட்கள் இரசாயன ரீதியில் சிதைவடைதல்.

31. புதிய பாலை நற்காப்புச் செய்வதற்கு உகந்த முறையாகக் கருதப்படுவது:

1. வெப்பமேற்றல்
2. தகரத்தில் அடைத்தல்
3. துரித ஆழ்குளிரேற்றல்
4. மந்த ஆழ்குளிரேற்றல்
5. நவீன சூரிய உலர்த்தல்

32. பின்வரும் உணவுத்தொகுதியில் செயற்கை நிறமூட்டிகள் சேர்ப்பது தடைசெய்யப்பட்டுள்ள உணவுத்தொகுதியைத் தெரிவு செய்க.

1. பதப்படுத்தா இறைச்சி, பிஸ்கட் வகை, வெண்ணெய்
2. இனிப்பு வகை, ஐஸ்கிறீம், பாண்
3. தேயிலை, சமைக்காத இறைச்சி, கட்டிப்பால்
4. குழந்தைகளுக்கான உணவு, அரைத்த கோப்பி, பானவகை
5. பால்மா, சொக்லட் வகைகள், பழங்கள்

33. ஓய்வு பற்றி சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பொழுதுபோக்கு, விளையாட்டு, உளமலர்ச்சிக்கு ஏதுவான செயற்பாடுகளில் ஈடுபடல்

B - விளையாட்டு, உடற்பயிற்சி போன்ற செயற்பாடுகளில் ஈடுபடல்

C - களிப்பூட்டும் பொழுதுபோக்குச் செயற்பாடுகள், உடலையும் உள்ளத்தையும் தளர்த்துவதற்குத் துணையாகும்.

D - வாழ்க்கையின் சமநிலையைத் தீர்மானிப்பதற்குத் துணையாகும்.

E - வேலைகளிலிருந்து விடுபட்டு சுயவிருப்பின் பேரில் மகிழ்வூட்டும் அல்லது பயன்தரும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

ஓய்வு என்பதன் பொருத்தமான கூற்றாகக் கருதப்படுவது

1. A    2. B    3. C
4. D    5. E

34) மாற்றுச்சுற்றுப் பயணம் தொடர்பான சில கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. இதில் சரியான கூற்று

A. அனுபவங்களின் பால் முனைப்புக் காட்டப்படல்
B நினைவுச்சின்னங்கள் கொள்வனவு செய்வதில் விருப்புக்காட்டப்படும்.
C. பரந்த அனுபவமோ ஆழமான விளக்கமோ இடம் பெறுவதில்லை.
D. மரபு ரீதியான சுற்றுப்பயண முறை.
E. பெரிய குழுக்களாகச் செல்லல்

1. A    2. B    3. C    4. D    5. E

35) எத்தனை வீதமான நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமான நன்னீராகக் காணப்படுகின்றது?

*1. 7%    2. 8%    3. 3%    4. 6%    5. 5%*

36) நீர்த்தேவை பற்றிய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. நீர்க்குழாய் வாயில்களில் கசிவு உள்ளதா எனச்சோதித்தல்
B. பிற கழிவுகள் போன்றவற்றை அலசுவதற்கு மலசலகூட அலசுதொட்டியைப் பயன்படுத்தாது விடல்.
C. குளியல் நேரத்தைக் கட்டுப்படுத்தல்
D. கழுவு குழாய்களுக்குப் பதிலாக வாளியில் நீரை நிரப்பி வாகனங்களைக் கழுவுதல்
E. சலவை இயந்திரங்களில் உச்ச கொள்ளளவு வரை புடைவைகளை இட்டுக் கழுவுதல்

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களில் மூன்றாம் நிலைத்தேவையாகக் கருதப்படுவது எது?

1. A    2. B    3. C    4. D    5. E

37) உயர் தடையைக் கொண்டதும் மின்னோட்டத்தைப் பாய விடாததுமான ஊடகம் பின்வருவனவற்றுள் எது?

1. கடத்தி    2. விநியோக வடங்கள்    3. காவலிகள்
4. புவித்தொடுப்புக் கம்பி    5. மின்சுற்றுடைப்பான்

38) மின்னைப் பயன்படுத்தி உணவு சமைக்கும் போது வினைத்திறனானதும் இலாபகரமானதுமான உபகரணமாகக் கருதக்கூடியது.

1. நுண்ணலைக் கனலடுப்பு    2. அமிழ்ப்பு வெப்பமாக்கி    3. வெப்பத்தட்டு
4. வளிபதனாக்கி    5. வாயு அடுப்பு

39) பின்வரும் கூற்றுக்களுள் பசுமை நுகர்வோர் தொடர்பான தவறான கூற்று

A. உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது சூழலுக்கு உகப்பானவற்றைத் தெரிதல்.

B. பசுமை நுகர்வோரின் நடத்தைகள் நிலைபேறான நுகர்வோரின் நடத்தைகளை ஒத்ததாகும்

C. பசுமை நுகர்வோர் தமது தனிப்பட்ட தேவைகளைக் கருத்திற் கொள்வர்

D. சூழலுக்கு இழிவான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல்

E. எப்போதும் சூழல் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பான விழிப்புடன் இருத்தல்

1. A 2. B 3. C 4. D 5. E

40) ஒவ்வொரு உற்பத்திக்குமான உணவு பாதச்சுவடுகளை அளவிட்டுக் கொள்வதற்காக கணிக்கப்படும் வாயு எது?

1. நைதரசன் 2. மீதேன் 3. நைத்திரிக்ஒட்சைட்
4. ஒட்சிசன் 5. காபனீரொட்சைட்

41) பின்வரும் உணவு வகைகளின் பாதச்சுவட்டுப் பெறுமானம் கூடிய உணவு எது?

1. கோழி இறைச்சி 2. மாட்டிறைச்சி 3. பால்
4. பாண் 5. பூசும் எண்ணெய் வகைகள்

42) உணவுச் சமிபாட்டுத் தொகுதியில் பாதகமான பற்றீரியாக்களின் வளர்ச்சியைத் தடுக்கும் குடல்வாழ் பற்றீரியா எது?

1. பிரிபயோட்டிக்கு 2. இலற்றோபசிலஸ் 3. ஸ்டெரோல்
4. அசற்றோபக்டர் 5. புரோபயோட்டிக்

43) மனித தேவைக்கான மூலிகைகள் பற்றிய கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. வல்லாரை, பொன்னாங்காணி

B. சிறுபுல்லடி, திப்பிலி

C. ஆடாதோடை, வேம்பு

D. வேம்பு, வேங்கை

E. பிள்ளைக்கற்றாளை, இஞ்சி

மேற்குறிப்பிடப்பட்டவற்றில் அரிமரத்திற்காகப் பயன்படுத்தப்படுதவை:

1. A 2. B 3. C 4. D 5. E

44) ஓசோன்படைப் பாதிப்பிற்கு உள்ளாதல் எக்கழிவுப்பொருள் சார்ந்த செயற்பாடாகும்?

1. திண்ம நிலைக்கழிவு 2. திரவ நிலைக்கழிவு 3. வாயு நிலைக்கழிவு
4. விவசாயத் திணைக்கள கழிவுப்பொருட்கள் 5. கைத்தொழில் கழிவு

45) கட்டிளமைப்பருவ உடல் வளர்ச்சி மாற்றத்தில் பெண்களின் என்புகள் முதிர்தல் எவ்வயதெல்லையாகக் கருதப்படுகின்றது.

1. 14 வயதில்
2. 17 வயதில்
3. 19 வயதில்
4. 19 வயதின் பின்
5. 17 வயதாகும் போது முடிவடையும்

46) சில கட்டிளமைப்பருவ மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன

- ✷ பாடவிதான உள்ளடக்கங்கள் அளவுக்கதிகமாகக் காணபப்டுகின்றது.
- ✷ நித்திரைக்குணம், சோம்பல் ஆகியவற்றால் கவனத்தை ஒருநிலைப்படுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது.
- ✷ போட்டிக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படல்
- ✷ ஊக்கல் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுகின்றது.

மேற்படி பிரச்சினையானது எவ்வகையினுள் அடங்கும்?

1. உளப்பிரச்சினை
2. புறத்தோற்றம் தொடர்பான பிரச்சினை
3. குடும்பப் பிரச்சினை
4. தொழில்சார்ந்த பிரச்சினை
5. கல்விசார்ந்த பிரச்சினை

47) உள அழுத்தம் கொண்ட நபர் ஒருவரில் காணக்கூடிய மனவெழுச்சி இயல்பு எது?

1. உனவில் விருப்பமின்மை
2. கலவரத்தன்மை
3. விடயத்தில் கவனத்தைச் செலுத்த முடியாமை
4. பாலியல் பலவீனம்
5. பெருமூச்சு விடல்

48) உடல், உள்ளம் ஆகியவற்றை தளர்வடையச் செய்யும் பயிற்சியாக நீர் கருதும் செயற்பாடு பின்வருவனவற்றுள் எது?

1. மூச்சுப்பயிற்சி
2. வரைதல்
3. உடற்பயிற்சியில் ஈடுபடல்
4. பாடல் கேட்டல்
5. நண்பர்களுடன் உரையாடல்

49) முயற்சியாண்மையாளரிடம் காணப்படும் பண்புகளில் ஒன்று

1. நுகர்வோரின் தேவைகளையும் விருப்பங்களையும் கருத்திற்கொள்ளல்.
2. இடர்களை எதிர்கொள்ளல்.
3. சூழல் குறித்து அக்கறையற்றிருத்தல்
4. உற்பத்திக் காரணிகளை வினைத்திறனாகப் பயன்படுத்தல்
5. வணிக பலவீனங்களை இனங்காணல்

50) வணிகம் ஒன்றினை ஆரம்பிக்கும் போது கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம்:

1. வணிகத்திற்கான இடம்
2. பகுப்பாய்வு
3. வணிகத்திட்டம்

. வணிக வாய்ப்புகள்

5. போட்டியாளர்

## (28) மனைப்பொருளியல்

## பகுதி - II

✳ முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.

---

**01)** 1. சிறந்த வாழ்க்கைச் சூழல் என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

2. உணவு அகத்துறிஞ்சல் என்றால் என்ன?

3. அல்லூட்டம் என்றால் என்ன?

4. நீரிழிவு நோய் காரணமாக ஏற்படக்கூடிய சிக்கல் நிலைமைகள் 2 தருக.

5. நூல் தயாரிப்பில் காரிக்கன் துணியை முற்பரிகரிப்பு செய்யும் படிமுறையைத் தருக.

6. நார்களின் இயல்புகளுக்கேற்ப வெப்ப சக்தி வழங்கும் போது எரிந்து சாம்பலாக மாறும் நார் வகைகள் இரண்டையும். உருகித் திரவமாக மாறும் நார் வகைகள் இரண்டையும் குறிப்பிடுக.

7. ஒரு விண்ணப்பதாரி நிறுவனத்தின் நேர்முகப்பரீட்சைக்கு தோற்ற முன்னதாக நிறுவனம் தொடர்பாக கொண்டிருக்க வேண்டிய தகவல்கள் இரண்டு தருக.

8. கழிவு நீர் உருவாகும் முறைகள் இரண்டு தருக.

9. கட்டிளமைப்பருவத்தினரால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளின் வகைகள் இரண்டு குறிப்பிடுக.

10. மின் வீட்டுப்பாவனையில் நுகர்வோருக்கான மின்கட்டணச் சிட்டை தயாரிக்கும் முறை மின் அலகின் எண்ணிக்கையில் இரண்டு வகைப்படும். அவை எவை?

(2X10 =20 புள்ளிகள்)

**02)** 1. பௌதிக வாழ்க்கைச் சூழலின் அடிப்படையான மூன்று பகுதிகளும் எவை?

(3 புள்ளிகள்)

2. சுற்றுப்பயணம் காரணமாக சுற்றுப்பயணத்துறையில் ஏற்படும் நேர்வகையான தாக்கங்கள் 3 தருக.

(3 புள்ளிகள்)

3. பசுமை நுகர்வோராக செயற்படுவதற்குக் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகள் 5 தருக.

(5 புள்ளிகள்)

4. நீர் விநியோகச் செலவு அதிகரிப்பதற்கான காரணங்கள் 5 தருக.

(5 புள்ளிகள்)

**03)** 1. இலங்கையின் தேசிய போசணைக் கொள்கையின் நோக்கம் யாது?

(3 புள்ளிகள்)

2. பழங்களை உட்கொள்வதன் முக்கியத்துவம் மூன்று தருக.

(3 புள்ளிகள்)

3. பாடசாலை மாணவனுக்கான பூரண காலையுணவுப் பட்டியலைத் திட்டமிடுக.

(4 புள்ளிகள்)

4. கொழுத்த உடல் நிலை ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றைக் குறிப்பிட்டு, கொழுத்த உடல்நிலை காரணமாக ஏற்படக்கூடிய நோய் நிலைமைகள் மூன்றையும் குறிப்பிடுக.

(6 புள்ளிகள்)

**04)** 1. உணவு நஞ்சாதல் என்பதனை விளக்குக.

(3 புள்ளிகள்)

2. உணவு நற்காப்பில் புகையூட்டல் செயற்பாட்டை விளக்குக.

(4 புள்ளிகள்)

3. யோக்கற் உற்பத்திப் படிமுறையை பாய்ச்சற்கோட்டுப் படத்தில் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

4. வெற்றிகரமான பெறுபேறுகளை அடைவதற்காக முயற்சியாண்மையாளரிடம் காணப்படவேண்டிய பண்புகள் ஐந்து தருக.

(5 புள்ளிகள்)

**05)** 1. ஆடைக் கைத்தொழிலுடன் இணைந்த பிற கைத்தொழில்கள் மூன்று குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

2. அடிப்படை நெசவைப் பாகுபடுத்திக் காட்டுக.

(3 புள்ளிகள்)

3. மேசைக்காப்புத்துண்டை தைக்கும் படிமுறையை தொடரொழுங்கில் தருக.

(5 புள்ளிகள்)

4. நேர்த்தியாக்கல் முறைகள் ஐந்து குறிப்பிட்டு ஒவ்வொன்றிற்கும் சிறு விளக்கம் தருக.

(5 புள்ளிகள்)

**06)** 1. மீள் சுழற்சி செய்ய முடியாததாக இருக்கும் வளங்கள் மூன்று குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

2. சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளைத் தவிர்க்கும் மனித நடவடிக்கைகள் நான்கு குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

3. கழிவு முகாமை என்றால் என்ன? இடர் தரு கழிவு வகைகள் மூன்று தருக.

(4 புள்ளிகள்)

4. கழிவு உற்பத்தியாதலை குறைப்பதற்கு எடுக்கக்கூடிய நடைமுறைகள் ஐந்து குறிப்பிடுக.

(5 புள்ளிகள்)

**07)** *1.* கட்டிளமைப்பருவ ஆண், பெண் பிள்ளைகளிடையே ஏற்படும் பாலியல் ரீதியான மாற்றம் இரண்டு வீதமும், துணைப்பாலியல்புகள் இரண்டு வீதமாக வேறுபடுத்திக் காட்டுக.

*(4 புள்ளிகள்)*

*2.* கட்டிளமைப்பருவப் பிள்ளைகள் முகம் கொடுக்கும் உளரீதியான பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அவற்றிற்கான தீர்வினை முன்வைக்குக.

*(6 புள்ளிகள்)*

*3.* சுய எண்ணக்கரு என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
சுய எண்ணக்கருவைக் கொண்டோரில் வெளிக்காட்டப்படும் இயல்புகள் நான்கு குறிப்பிடுக.

*(6 புள்ளிகள்)*

**08)** கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களில் எவையேனும் நான்கிற்கு மட்டும் சிறுகுறிப்பு எழுதுக.

*1.* உட்புறவெளி நிர்மாணிப்பில் இயற்கை ஒளியூட்டம்.
*2.* இதய நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கான உணவுவேளை
*3.* துணி அச்சிடல் முறையில் வர்ணம் தீட்டல்
*4.* ஓய்வுநேரக் களிப்பில் இன்பப்பொழுதுபோக்கு
*5.* வணிக உற்பத்தியில் தரக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்.

*(4 X 4 =16 புள்ளிகள்)*